[12th February 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தத் தொகையின் அளவு நாம் எடுத்துக்கொண்ட திட்டங்களைப் பொறுத்திருக்கிறது. அவர்களுடைய திட்டப் பிரகாரம் நமது திட்டத்திற்கு அவர்களிடமிருந்து வர வேண்டிய தொகை ரூ. 2,000. அதை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஹிந்தியை இன்னும் அதிகமாகப் பரப்புவதற்காக அவர்களிடமிருந்து நாம் இன்னும் நிதி உதவி பெறுவதைப் பொறுத்தவரையில், "ஹிந்தியை எந்த முறையில் பரப்புவது என்பதைப்பற்றி இந்த சபையும் விவாதித்திருக்கிறது ; சர்க்காரும் அது சம்பந்தமாகத் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறது" என்ற காரணத்தால் அந்தப் பிரச்னை இந்த சந்தர்ப்பத்தில் எழவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR : இந்தப் பணம் எப்படி விநியோகிக்கப்பட்டு செலவிடப்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஹிந்தியைக் கற்றுக்கொள்வதற்கு ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கவேண்டுமா அல்லது ட்யூஷன் மூலம் ஹிந்தி கற்றுக்கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தட்சிண பாரத ஹிந்திப் பிரசார சபையின் முயற்சிகளுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. அப்படி அளிக்கப்படும் நிதி உதவியில் பாதித் தொகை மத்திய சர்க்காரால் கொடுக்கப்படுகிறது.

SRI K. ANBAZHAGAN : சென்னை அரசாங்கத்தர், இந்த வட்டாரத்தில் ஹிந்தியைப் பரப்புவதில் காட்டும் அளவு அக்கறையை, இந்த மாநில அரசாங்க உத்தியோகஸ்தர்களில் தமிழ் தெரியாதவர்கள் தமிழ் கற்பதை ஊக்குவிப்பதற்கும் காட்டுகிறார்களா ? அதற்கான நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தமிழைப் பரப்புவதில் கனம் அங்கத்தினரைவிட எனக்கு அதிக ஊக்கம் இருக்கிறது என்பதை அவரே அறிவார் என்று நம்புகிறேன். தமிழைப் பரப்புவதற்கு வேண்டியவற்றையெல்லாம் நாங்கள் செய்துவருகிறோம்.

Deputation of State Police Force to Assam.

* 65 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have sent any Police Force to Assam to fight the Naga rebels; and

(*b*) if so, whether the expenditure is boren by the State Government or Union Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Malabar Special Police has been deputed to the Naga Hills area of Assam to perform guard and other duties.

(*b*) The expenditure is initially borne by this Government. The expenditure incurred up to 30th November 1957 will be recovered from the Assam Government. As the administration of the Naga Hills district has been taken over by the Government of India with effect from 1st December 1957, the expenditure incurred from that date will be recovered from the Government of India.

* 66 *Q.*—SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any Police force was deputed for service in the Naga Hills region;

12th February 1958]

(*b*) the strength of the force so **deputed;**

(*c*) the period for which it was **deputed;**

(*d*) the nature of work assigned to it there?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : **(*a*) Yes, Sir.**

(*b*) One headquarter and five active companies of the Malabar Special Police.

(*c*) No specific period of deputation has been prescribed.

(*d*) The duties of Police Battalions including the Malabar Special Police stationed in **Assam are to protect the villages from** the constant inroads and attacks by the Naga rebels living in jungles, to provide escorts for the passing convoys, to guard Government offices and buildings, to provide road patrols, to provide escorts for officials touring the villages and to enforce law and order.

SRI M. P. SUBRAMANIAM : சுதந்திர நாக நாடு வேண்டுமென்று கோரும் நாகர்களைச் சுட்டுத்தள்ளுவதற்கு மத்திய அரசாங்கத்தின் ராணுவம் போதாதென்று சென்னை அரசாங்கத்தின் போலீஸ் உதவியை நாடியது மத்திய அரசாங்கமா அல்லது அஸ்ஸாம் அரசாங்கமா ? சுதந்திர உணர்ச்சியை நசுக்கும் நோக்கத்துடன் வெள்ளையர் கையாண்ட முறையைக் கையாண்டதற்கு உடந்தையாக இந்த ராஜ்ய அரசாங்கம் இருந்ததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சுதந்திர உணர்ச்சியோ சுதந்திர கோரிக்கையோ பிரச்னை அல்ல. பலாத்காரத்தில் ஈடுபட்டு நாசத்தை விளைவிப்பவர்களிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக அப்படிச் செய்பவர்களைச் சுட்டுத்தள்ளுவதைத் தடுக்கமுடியாது. அப்படிப்பட்ட உதவியைச் செய்து அங்கே அமைதியை நிலைநாட்டுவதற்காகத் தான் இந்த அரசாங்கம் மட்டுமின்றி வேறு சில ராஜ்ய அரசாங்கங்களும் தங்கள் தங்கள் போலீஸ் படையில் ஒரு பகுதியை அங்கே அனுப்பி யிருக்கின்றன.

MR. SPEAKER : Hon. Members must be aware that insinua**tions should not be made during question time.**

SRI K. B. S. MANI : அஸ்ஸாமுக்கு இங்கிருந்து அனுப்பப்பட்ட போலீசாரில் யாராவது நாகா கலகத்தில் கொல்லப்பட்டார்களா ? அப்படிக் கொல்லப்பட்டிருந்தால், கொல்லப்பட்டவர்களுடைய குடும்பங்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில போலீசார் கொல்லப் பட்டார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMI : சென்னையிலிருந்து அஸ்ஸாமிற்கு இதற்காகச் சென்ற போலீசாரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எவ் வளவு ? அவர்களுடைய குடும்பங்களுக்கு கொடுக்கப்பட்ட நிதி உதவி தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI M. P. SARATHI : அஸ்ஸாமிற்கு இதற்காக அனுப்பப்பட்டவர்களின் சம்பள விகிதமோ படிச் செலவோ அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்களுக்கு சில விசேஷ சலுகைகள் வேண்டுமென்று கோரப்பட்டு சிபாரிசும் செய்யப்பட்டது. அவைகள் எற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

[12th February 1958

SRI V. K. KOTHANDARAMAN : ஒவ்வொரு ராஜ்யத்திலும் போலீஸ் படை இருக்கும்போது ஒரு ராஜ்யப் போலீஸ் படையை இன்னொரு ராஜ்யத்திற்குக் கொண்டுபோவதற்குக் காரணம் என்ன ? அந்த ராஜ்யத்திலுள்ள போலீஸ் படை அந்த அரசாங்கத்தார் சொல்லக்கூடிய வார்த்தைக் கிணங்கி சுடமாட்டார்கள், அடிக்கமாட்டார்கள் என்று . . .

MR. SPEAKER : கேள்வியின் மூலம் தகவல் கேட்கலாம் என்றும், கேள்வியில் இன்ஸினுவேஷன்" இருக்கக்கூடாது என்றும் முன்பே சொன்னேன். ஆகையால் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கக்கூடாது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விசேஷ அவசியத்திற்காகக் கோரும்போது ஒரு ராஜ்யம் இன்னொரு ராஜ்யத்திற்குப் போலீஸ் உதவி செய்வதில் தவறு ஒன்றுமில்லை.

SRI K. ANBAZHAGAN : மலபார் பிரிந்து கேரள ராஜ்யத்துடன் சேர்ந்திருக்கிறது. அஸ்ஸாமிலுள்ள மலபார் போலீஸ் மட்டும் சென்னை அரசாங்கத்தைச் சேர்ந்ததாகவே உள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மலபார் பிரிந்த பிறகு மலபார் போலீஸ் சென்னை அரசாங்கத்தைச் சேர்ந்ததாகத்தான் இருக்கிறது.

SRI A. V. P. ASAITHAMBI : அஸ்ஸாமிற்கு அருகே இதர பல ராஜ்யங்கள் இருக்க, அவைகளுடைய போலீஸ் படைகளை அங்கே அனுப்பாவிட்டாலும், மத்திய சர்க்காரின் ராணுவத்தை அங்கே அனுப்பியிருக்க முடியும் என்ற நிலையில், சென்னையிலிருந்து போலீஸ் படையை அங்கே அனுப்பவேண்டிய முக்கியத்துவம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்னேன் : நமது ராஜ்யம் மட்டுமின்றி இதர 4-5 ராஜ்யங்கள் தங்கள் தங்கள் போலீஸ் படையை அங்கே அனுப்பியிருக்கின்றன. ராணுவத்தாரின் உதவியைப் பெற முடிந்தாலும், நமது ராஜ்யப் போலீஸின் உதவியும் அங்கே ஓரளவு வேண்டியிருந்ததால், இங்கிருந்தும் போலீஸ் படை அனுப்பப்பட்டிருக்கிறது.

SRI M. P. SUBRAMANIAM : சென்னை ராஜ்ய அரசாங்கத்தாரே தங்கள் ராஜ்யத்திற்கு ஆந்திராவிலிருந்து போலீஸ்காரர்களை வரவழைக்க வேண்டிய நிலையில், அஸ்ஸாமில் இதுவரையில் இந்த ராஜ்யப் போலீஸ் படையை வைத்திருப்பதற்குக் காரணம் என்ன ?

MR. SPEAKER : I disallow this question, because this has nothing to do with the main question. There is insinuation in the supplementary question. I therefore disallow it.

Higher Technological Institute at Madras.

* 67 *Q.*—SRI A. VEDARATHNAM PILLAI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Union Government have sanctioned the setting up of a Higher Technological Institute at Guindy;

(*b*) the technologies that will be taught in this institute;

(*c*) the subsidy given by the Union Government in this behalf; and

(*d*) whether this amount is the same as that received by Kanpur?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Government of India have decided to establish the Southern Higher Technological Institute at Madras.